**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண்.42/2015**

PW2 – திருமதி.வசந்தாள் நாள். 10.07.2025

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்., பி.பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Assistant (உதவியாளர்) திரு.அழகர்சாமி என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**1 முதல் 4 வரை உள்ள பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பங்கு சொத்தை பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கை தாக்கல் செய்யும் பொருட்டு வழக்கின் விவரத்தை யார் யார் சொல்லி வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது என்றால் நான் மட்டும் தான் சொன்னேன். வழக்குச் சொத்தானது ஆரம்ப காலத்தில் காளிமுத்து அம்பலம் என்னும் நபருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குச் சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.58/1 ஆகும்.

2. வழக்குச் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2 ஏக்கர் 20 செண்டுகள் ஆகும். வழக்குச் சொத்தை ஜமாத் 02.07.1997 ம்ஆண்டு கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்குச் சொத்தானது கவலை வென்றான் முஸ்லிம் ஜமாத்தானது கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். மேற்படி ஜமாத்தை இவ்வழக்கின் தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் UDR பட்டா எண்.1289 என்றால் சரிதான். மேற்படி காளிமுத்து அம்பலத்திற்கு ஆனிமுத்து அம்பலம், அழகு அம்பலம், சுப்பையா அம்பலம் மற்றும் காளிமுத்து அம்பலம் ஆகியோர் மக்கள் என்றால் சரிதான். மேற்படி

ஆணிமுத்து அம்பலம் பொன்னம்மாளை திருமணம் செய்தார் என்றால் சரிதான். ஆணிமுத்து அம்பலத்திற்கும் பொன்னம்மாளிற்கும் மாரியம்மாள் என்னும் மகள் உண்டு என்றால் சரிதான்.

3. தாவா சொத்தானது UDR பட்டா காலத்தில் சுப்பையா அம்பலம், காளிமுத்து அம்பலம், அழகு அம்பலம் மகன் முத்து மாணிக்கம் ஆகியோர் பெயரில் தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 பட்டாவை மறுப்பு செய்து நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் இல்லை ஆனால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்தை கவலை வென்றான் ஜமாத் கிரையம் பெற்று பட்டா வாங்கியதை நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை